**தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் - 2014**

---

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆந்திகதிய 2217 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 6 ஆம் பட்டோலையின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்குதி

---

கடன் உடன்படிக்கையின்படி, முன்னைய நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன முறையே செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை வினைத்திறனுடன் முன்னேற்றுதல் மற்றும் வீதித்துறை நிறுவனங்களை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,760 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 216 மில்லியனானதுடன் அதில் ரூபா 16,500 மில்லினிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2008 பெப்ரவரி 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று கைசாத்திடப்பட்டதுடன் இதன்படி மூல கடன் தொகைக்குள் செயற்திட்டத்தின் நோக்கெல்லையை மாற்றுவதற்கு 2008 மே 27 இல் கடன் உடன்படிக்கை திருத்தப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட கடனிற்கு மேலதிகமாக, 2010 ஒக்தோபர் 04 இல் பொருளாதார அபிவிருத்திக்கான ஓபெக் நிதியத்துடன் இலங்கை அரசாங்கத்தால் 1355 பி ஆம் இலக்க கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் பொருளாதார அபிவிருத்திக்கான ஓபெக் நிதியத்தால் ரூபா 880 மில்லயனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியன் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. ரூபா 9,350 மில்லயனிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியனை ஒதுக்குவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் 2011 ஒக்தோபர் 04 இல் 2767 –எஸ்ஆர்ஜ ஆம் இலக்க குறைநிரப்பு கடன் உடன்படிக்கையும் கைசாத்திடப்பட்டிருந்தது. குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளிற்காக 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆரம்ப கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்ட நடவடிக்கைகள் 2006 ஏப்ரல் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கபட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புக்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்தது. பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் நிதியளிப்பு நடவடிக்கைகள் 2015 யூன் 30 அளவில் மூடப்பட வேண்டும். குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின் கீழ் மேற்கொண்ட நடவடிக்கைகள் 2016 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர்கள் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக் கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழிவுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழிவுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

தவறான கணிப்பீடு காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு ரூபா 169,312 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | | 2014 திசெம்பர் 31 வரை பயன்பாடுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடிபீ | 150.00 | 16,500.00 | - | - | 150.00 | 17,272.20 |
| ஓஎவ்ஐடி | 8.00 | 880.00 | - | - | 8.00 | 928.55 |
| இலங்கை அரசாங்கம் | 58.00 | 6,380.00 | 7.73 | 1,004.57 | 62.51 | 8,125.74 |
| | **216.00** | **23,760.00** | **7.73** | **1,004.57** | **220.51** | **26,326.49** |

### 3.2. பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 06 தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் செயலக கட்டிடத்தின் நிர்மாணம் என்பவற்றின் நடவடிக்கைகள் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட சகல வீதிப் புனரமைப்பு வேலைகளும் 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கட்டிடத்தின் கட்டம் III இன் நிர்மாண வேலைகள் 2014 யூலை 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3. ஒப்பந்த நிர்வாகம்

நெடுஞ்சாலைகள் செயலக கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2010 ஆகஸ்ட் 17 இல் ரூபா 599.30 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சகல 08 மட்டங்களிலும், முதலாவது 03 மட்டங்களை 2011 நவம்பர் 04 இற்கு முன்னர் பூர்த்தியாக்குவதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நிர்மாண வேலைகளின் 90 சதவீதம் பூர்த்தியாக்கிய காலத்தில், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2011 திசெம்பரில் ரூபா 568.14 மில்லியன் மேலதிக கிரயத்தில் அதே ஒப்பந்தகாரருக்கு ஏனைய ஐந்து மட்டங்களின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தை வழங்கியிருந்ததுடன் மேலும், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு ரூபா 795.73 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேலும் இரண்டு மட்டங்களினால் கட்டிடத்தை விரிவாக்குவதற்காக 2012 யூன் மாதத்தில் தீர்மானித்தது. ஆகவே, பத்து மட்டங்களை கொண்டுள்ள கட்டிடத்தின் மொத்த எதிர்பார்க்கப்பட்ட கிரயம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,963.17 மில்லியனாக இருந்தது. மேற்குறிப்பிட்ட 03 மட்டங்களிற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புகளிலிருந்து மேலதிக கிரயம் செய்வதற்காக 2013 யூலை 11 இல் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கட்டிடத்தின் சகல பத்து மட்டங்களின் வேலைகள் பெருமளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என 2013 பெப்ரவரி மாதத்திற்கான ஆலோசனையாளரின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.3.2. மற்றும் 8.13.4 ஆம் பந்திகளின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிடமிருந்தான அங்கீகாரம் நோக்கெல்லை மாற்றங்கள் மற்றும் அவற்றின் மீது வழங்கப்பட்ட கால நீடிப்பிற்காக பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், இறுதிக் கட்டத்தின் நிர்மாண வேலைகளை தொடருவதற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் பரஸ்பரம் உடன்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது எழுத்துமூல உடன்படிக்கையோ அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனமோ கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) நிர்மாண வேலைகளின் நோக்கெல்லையில் செய்யப்பட்ட வழமையான மாற்றங்களின் விளைவால், ஒப்பந்தகாரர் வேலைகளின் முரண்களிற்காக உயர்ந்த வீதங்களை பிரயோகிப்பதற்கு அறைகள் ஒதுக்கப்பட்டது. ஆதலால் நிர்மாணத்தின் கட்டம் III இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைகள் மீதான மதிப்பிடப்பட்ட கிரயங்களிற்கு மேல் 13 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சில் முரண் கிரயங்கள் என சான்றுபடுத்தப்பட்டது. ஒப்பந்தக்காரரல் சீராக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நாளது வரையாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், தாமதக் கட்டணங்களை தீர்மானிக்கவும் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடவும் முடியாதிருந்தது.

(iii) கட்டிட வரைபடத்தின் பிரகாரம், கட்டிடத்திற்குள் அல்லது வெளியே கார் தரிப்பிட நோக்கத்திற்காக இடமெதுவும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அவற்றில் மேலதிக இடத் தேவைகள் வழங்க வேண்டியிருந்தது.

(iv) ஒப்பந்த உடன்படிக்கையின் விசேட நிபந்தனையின் பிரகாரம், ஒப்பந்தகாரர் மேலதிக வேலைகளில் 15 சதவீத இலாப எல்லையை கோருவதற்கு அனுமதிக்கப்பட்டார். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு முரணாக 25 சதவீத இலாப எல்லையை கோரியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தகாரரின் 2012 நவம்பர் 17 ஆந் திகதிய சீ/369/10/எச்எஸ்பீ-எச்ஓ/2013 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், நிர்மாணத்தின் கட்டம் III இற்காக உடன்பட்ட தொகையைவிட ஏதாவது மேலதிக கோரிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை என உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 6.14 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான மேலதிக கோரிக்கை வேலைத்தளத்தில் இருந்த தொழிலாளர்கள் மற்றும் பொருட்கள், போக்குவரத்துக் கட்டணங்கள் போன்றவற்றிற்காக கோரப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(v) ஒப்பந்த உடன்படிக்கையின் 14.10 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரர் அளவீட்டு பட்டியலின் கீழ் உள்ளடக்கப்பட்ட சகல வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன என சான்றுபடுத்துவதற்கு ஒப்பந்தத்தின் இறுதியில் பூர்த்தியாக்கல் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2014 திசெம்பர் 31 வரையும்

பூர்த்தியாக்கப்பட்டிருக்காத ரூபா 50.13 மில்லியன் பெறுமதியான வேலைகளிற்காக பூர்த்தியாக்கல் கூற்றினை சமர்ப்பித்திருந்தார்.

### 3.4. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

நெடுஞ்சாலைகள் செயலக கட்டிடத்திற்கான உள்ளக வடிவமைப்பிற்காக ஆரம்பத்தில் ஒரு ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆகஸ்த்து 31 இல் உள்ளவாறு ரூபா 37.77 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 7.19 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் கட்டிடத்தின் 09 மட்டங்களின் உள்ளக வடிவமைப்பு நோக்கத்திற்காக கொள்வனவு நடைமுறையை பிரயோகிக்காமல் 2014 செப்தெம்பர் 22 இல் இன்னொரு ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

### 3.5. நிதிக்கட்டுப்பாடு மீதான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நெடுஞ்சாலைகள் செயலக கட்டிட நிர்மாணத்தில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரர் 2014 செப்தெம்பரில் செய்யப்பட்ட முரண் கட்டளையின் கீழ் இரும்பு சீலிங் வழங்கல் மற்றும் பொருத்தலிற்காக ரூபா 32.25 மில்லியன் தொகை செலுத்தப்பட்டதுடன் இறுதியாக அவற்றில் ரூபா 2.57 மில்லியன் மேலதிக தொகை செலுத்தப்பட்டதென வெளிப்பட்டது. செயற்திட்டமானது ஒப்பந்தகாரருக்கு மேலதிக நிதி நலன்களை அனுமதிப்பதுடன் 2014 திசெம்பரில் மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், ரூபா 8.14 மில்லியன் பெறுமதியான தட்டையான கேபிள் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரால் ரூபா 11.63 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது, ஆதலால் ரூபா 3.49 மில்லியன் மேலதிக கொடுப்பனவை காட்டுகின்றன. எவ்வாறாயினும், இந்த மேலதிக கொடுப்பனவும் கொடுப்பனவு திகதியிலிருந்து 08 மாதங்களின் பின்னர் 2014 திசெம்பரில் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது செயலக கட்டிடத்திற்காக ரூபா 268.79 மில்லியன் கிரயத்தில் மின்பிறப்பாக்கி, வீதி விளக்கிடல் முறைமை, குளிரூட்டல் முறைமை, பாரந்தூக்கிகள் மற்றும் ஏனைய விடயங்கள் போன்றவற்றிக்காக பல்வேறு உபபாக விடயங்களை வழங்கி பொருத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரை 15 சதவீத இலாபம், மேந்தலைக் கட்டணங்கள் மற்றும் 15 சதவீத பொருத்துதல் கட்டணங்கள் போன்ற மேலதிக மிகைகளை உழைப்பதற்கு அனுமதிப்பதுடன் இது பிரதான ஒப்பந்தத்திற்கு முரணாக கருதப்பட்டது.

### 3.6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 59 பதவியணி நிலைகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் பதவியணி 70 ஊழியர்களைக் கொண்டிருந்தது.

எவ்வாறாயினும், 03 சிரேஸ்ட பொறியியலாளர்கள் உள்ளடங்கலாக 11 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் நிரப்பப்படாது இருந்தன. மேலும், 08 ஆலோசனையாளர்கள், 02 எழுதுனர்கள் மற்றும் ஒரு முறைமை பகுப்பாய்வாளர் போன்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத போதிலும் அத்தகைய பதவிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 3,158,130 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஏப்ரல் 5 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் 2.2.7 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டத்தின் சகல நியமனங்களும் திருப்திகரமான செயலாற்றலிற்கு உட்படுத்தி வருடாந்தம் புதுப்பிக்கக்கூடிய ஆகக் கூடிய மூன்று ஆண்டுகள் காலம் ஒன்றிற்காக ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 34 பதவியணி உறுப்பினர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைக்கு முரணாக தற்காலிக அடிப்படையில் செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.